**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், செய்யூர்</u>**

**<u>அசல் வழக்கு எண்.19/2020</u>**

**<u>(DW1)</u>**

| | | |
|---|---|---|
| **பெயர்.திரு.வரதராஜன்** | த/பெ.(அ)க/பெ.கோவிந்தசாமி | நாள் 07.03.2024 |

**<u>பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

நான் இந்த வழக்கில் முதல் பிரதிவாதி என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் என் இடத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எத்தனை இன சொத்துக்கு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் என் சொத்துக்கள் அனைத்தும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. வாதி வழக்கு தாக்கல் செய்த சொத்து விவரங்கள் தெரியுமா என்றால் சர்வே எண்.986/10 க்கு தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு வழங்கப்பட்ட பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் சுமாராக எழுத படிக்க தெரியும். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

3. பிரமாண வாக்குமூலத்தில் நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தேன். என் வழக்கறிஞரிடம் எத்தனை இன சொத்துக்களுக்கு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் என் சொத்துக்கள் அனைத்திற்கும் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டு தெரிந்து கொண்டேன்.

4. என்னுடைய பூர்வீகம் சூணாம்பேடு என்றால் சரிதான். வாதி ஆறுமுகம், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், முட்டியூர் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். வாதி 27.1.2000ல் தாவா சொத்துக்களை ஜீலாதேவி அவரது குமாரத்தி சங்கீதா, சுரேஷ் ஆகியோர்களிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் தாவா "ஏ" அட்டவணை சொத்துக்களை கிரையம் பெற்றார். எனக்கு அவர் கிரையம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் நான் தான் உடனிருந்து வாங்கி கொடுத்தேன்.

5. வா.சா.ஆ.1 ல் 3வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் முதல் மற்றும் இரண்டு சாட்சி கையெழுத்துக்களை போட்டவர்கள் யார் என்று

தெரியுமா என்றால் ஷீலாதேவியின் கணவர் தயாளன் முதல் சாட்சி கையொப்பத்தையும், 2வது சாட்சி கையொப்பத்தை எங்கள் ஊரை சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவரும் செய்தார்கள்.

6. வா.சா.ஆ.1ல் பத்திரத்தில் மைனருக்காகவும், தனக்காகவும் இந்த படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த கிராம நத்தம் மனை மேற்படி மனையில் உள்ள கட்டுக்கோப்பு மெத்தை வீடு வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான்.

7. கிராம நத்த மனை சர்வே எண்.762/2ல் 50.66 செண்டில் 1-3/4 செண்டுக்கு ஐக்குபந்தி கடை வீதி செல்லும் ரோட்டுக்கு மேற்கு, வரதராஜன் வீட்டிற்கு தெற்கு, மூாசிலாமணி ஆசிரியர் வீட்டுக்கு வடக்கு, வேலாயுதம் வீட்டிற்கு கிழக்கு இதன் மத்தியில் கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது. ஆனால் பத்திரத்தில் அவ்வாறு தப்பாக எழுதப்பட்டுள்ளது.

8. 4 பக்க எல்லைக்குட்பட்ட சொத்துக்களை தான் வாதி ஆறுமுகம் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். வரதராஜன் வீட்டிற்கு தெற்கு என்று வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள வரதராஜன் நான் தான் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தெற்கில் தான் தாவா சொத்து அமைந்துள்ளது என்றால் சரியல்ல. வாதி ஆறுமுகம் வீடு எனது வீட்டிற்கு எந்த பக்கத்திலும் இல்லை. எனது வீட்டிற்கு நான்கு பக்க ஐக்குபந்திகள் எனக்கு தெரியாது.

9. வா.சா.ஆ.1ல் 5வது பக்கத்தில் நான் அனுபவிக்கும்இடத்தில் யாதும் விதமான தளனோ, வில்லங்கமோ வாரிசு உரிமை போன்ற டைடில் தகராறோ இல்லை என்று கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது. தாவா சொத்து விவரத்தில் 4 பக்க எல்லைகளை குறிப்பிட்டு வடக்கு தெற்கில் சாலைக்காக 22-1/2 அடி என்று குறிப்பிடப்பட்டள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கிழக்கு-மேற்கில் எங்கள் வீட்டிற்கு 35 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. 22-1/2க்கு 35 அடிக்கு உட்பட்ட சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான். வடக்கு தெற்கில் எனது வீட்டிற்கும், மாசிலாமணி வீட்டிற்கும் இடையில் வாங்கிய சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.1ன் படி வேலாயுதம் வீட்டிற்கும், சாலைக்கும் 35 அடி என்றால் சரிதான். ஷீலாதேவி யாரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சிவாநந்த

முதலியாரிடமிருந்து கிரையம் பெற்றார். அதற்குண்டான கிரையம் பத்திரம் வா.சா.ஆ.2 என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.2ல் சொத்து விவரத்தில் 1-3/4 செண்டிற்கு ஐக்குபந்தி கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் ஐக்குபந்தி தவறுதலாக இருக்கலாம். ரோட்டுக்கு மேற்கு, கோவிந்தசாமி முதலியார் வீட்டிற்கு தெற்கு, மாசிலாமணி வீட்டிற்கு வடக்கு, வேலாயுதம் காலி மனைக்கு கிழக்கு இதன் மத்தியில் வடக்கு-தெற்கு - 22-1/2அடி, கிழக்கு-மேற்கு 35 அடி என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

12. கோவிந்தராஜ் முதலியார் வீட்டிற்கு தெற்கு என்று கண்டுள்ளதில் கோவிந்தராஜ் முதலியார் யார் என்றால் எனது தந்தை ஆவார். ஷீலாதேவிக்கு கிரையம் கொடுக்கும்போது காலி மனை என்று கண்டுள்ளது என்றால் சரிதான். ஷீலாதேவி 29.4.1991 காலிமனையாக வாங்கி தான் வீடு கட்டினார் என்றால் சரிதான்.

13. நானும், சிவாநந்த முதலியாரும் பங்காளிகளா என்றால் இல்லை. நாங்கள் இருவரும் ஒரே ஜாதியை சேர்ந்தவர்கள். சிவாநந்த முதலியார் தனக்கு பூர்வீகமாக கிடைக்கப்பெற்ற சொத்து என்று பத்திரத்தில் சொல்லி இருந்தால் தவறு. அவர் பாட்ஷா பாய் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். சிவாநந்த முதலியாருக்கும், எனக்கும் பட்டா இருந்தது என்றால் பட்டா இருந்தது. ஆனால் எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு தெரியாது. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

14. அந்த பட்டா என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த பட்டா என்னிடம் தான் உள்ளது என்றாலும் அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மையான விஸ்தீரணம் எவ்வளவு என்று நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றாலும் அதை மறைப்பதற்காக தான் பட்டா இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15. வாதி 2 அயிட்ட சொத்துக்களுக்கான ஏ அட்டவணை மற்றும் பி அட்டவணை சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியும். ஆனால் பி அட்டவணை சொத்தை நான் அனுபவித்து வருகிறேன். தாவா பி அட்டவணை சொத்து வேலாயுதம் வீட்டிற்கும், வாதி ஆறுமுகம் வீட்டிற்கும் இடைப்பட்ட பகுதி தான் தாவா பி அட்டவணை சொத்து என்றால் சரிதான்.

16. பி அட்டவணை சொத்தில் 2009 ல் அத்து மீறி பிரவேசித்து செப்டி டேங்க் நான் கட்டினேன் என்றால் சரியல்ல. அந்த செப்டி டேங்க் ஏற்கனவே அங்கு இருந்தது. அதை நான் புதுபித்தேன். அதை நான் புதுபித்த போது ஆறுமுகம் என் மேல் புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் தான் நான் செப்டி டேங்க் புதுபித்ததை நிறுத்தினேன் என்றால் சரிதான்.

17. அந்த செப்டி டேங்கை கட்ட கூடாது என்று அதற்கு விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா சொத்தில் தடையுத்தரவு கோரியும் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

18. நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணையர் வரும்போது பூசுவேலை நடந்து கொண்டு இருந்தது என்றால் அவ்வாறு பூசுவேலை நடந்து கொண்டிருந்ததை நிறுத்தப்பட்டது. வாதி ஆறுமுகம் எ அட்டவணை சொத்திலிருந்து பி அட்டவணை சொத்திற்கு செல்வதற்காக வழியை பயன்படுத்தி வந்தார் என்றாலும் அதை நான் செங்கல் வைத்து பூசுவேலை செய்து அடைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் செய்யவில்லை,. ஏற்கனவே காம்பவுண்டாக இருந்தது தான். வாதி தான் சுவற்றை உடைத்து வந்தார்.

19. பி அட்டவணை சொத்தை புழக்கடை பகுதியாக வாதியும், அதற்கு முன்பாக வாதிக்கு கிரையம் கொடுத்த ஜீலாதேவியும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவித்து வந்தேன். நான் மேற்சொன்ன பி அட்டவணை சொத்தை அனுபவித்து வந்திருந்தால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்திருக்க மாட்டேன் என்றாலும் தற்போது வழக்குக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20. உண்மையாக தாவா பி அட்டவணை சொத்தை நான் அனுபவித்து வந்திருந்தால் எனது சொத்திற்கு கிழக்கில் வாதி கிரையம் வாங்கியிருப்பார் என்றாலும் அவ்வாறு வா.சா.ஆ.1 ல் சொத்து விவர ஜக்குபந்தியில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

21. வா.சா.ஆ.1 ஜக்குபந்தி தவறாக கட்டி உள்ளார் என்பதையும் நான் நீதிமன்றத்திலோ வழக்கோ, புகார் மனுவோ எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஜக்குபந்தி தவறாக உள்ளது என்றாலும் நான் தான் அனுபவித்து வருவதற்கான

ஆவணங்களை நீதிமன்றத்திலோ, வருவாய் துறை அலுவலகத்திலோ எதாவது மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

22. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 180 சதுர அடி இடத்திற்கு நானோ, பிரதிவாதிகளோ உரிமையாளர் என்று குறிப்பிட்டு மேற்கொண்ட 150 சதுரஅடி மனையை எனது வீட்டிற்கு வழியாக செல்வதற்கு பயன்படுத்தி வருகிறேன் என்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் எது உண்மை என்றால் 3 பாகத்தில் 2 பேர் பாகத்தை நான் வாங்கிவிட்டேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள அடி கணக்குகள் பற்றிய விவரம் எனக்கு சரியாக தெரியாது.

23. மேலும் எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் வாழைமரம் மற்றும் தென்னை மரம் வைத்துள்ளதாக சொல்லிவிட்டு மீண்டும் வழி பாதையாக பயன்படுத்துவதாகவும் சொல்லியுள்ள நிலையில் எது உண்மை என்றால் வடக்கு, கிழக்கு பக்கங்களும் நான் தான் அனுபவித்து வருகிறேன்.

24. எனது வீட்டிற்கு வாசல் எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு மற்றும் வடக்கில் இருபுறமும் உள்ளது. எனக்கு கிழக்கு பக்கம் தான் வாசல் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

25. பி.வா.சா.ஆ.1 தாவா சொத்துக்கு வடக்கில் உள்ள சொத்துக்கான ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1க்கும், தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 மற்றும் பீ.வா.ஆ.4 தாவா சொத்திற்கு வடக்கில் உள்ள ஆவணம் என்றால் சரிதான். மின் இணைப்பு எனது வீட்டிற்கான ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ1 வாதி எந்த தகராறிலும் ஈடுபடவில்லை என்றால் சரிதான்.

26. வாதி கிரையம் வாங்கிய சொத்தில் தான் நான் தகராறில் ஈடுபடுகிறேன் என்றால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சொத்தின் ஒரு பகுதி தான் தாவா பி அட்டவணை சொத்து என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்து எனது சொத்து. தாவா ஏ அட்டவணை சொத்தின் ஒரு பகுதி தான் தாவா பி அட்டவணை சொத்து என்றாலும் நான் பொய்யாக எதிர்வியாஜ்ஜியம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

27. வாதி வெளியூர்காரர் என்பதால் நான் உள்ளூர்கார் என்பதால் நான் பண பலம், ஆள்பலம் என்பதால் வாதி வெளியூர்காரர் என்பதால் வாதியை மிரட்டி அவரிடமிருந்து தாவா பி அட்டவணை சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றாலும் அதனால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

28. உண்மையிலேயே தாவா பி அட்டவணை சொத்தை நான் அனுபவித்திருந்தால் மேற்கு பக்க எல்லை வேலாயுதம் மனை என்று குறிப்பிட்டு எழுதப்பட்ட வா.சா.ஆ.1பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தை அனுபவிக்காததால் வா.சா.ஆ.1 பி அட்டவணை பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் படிக்க தெரியாததால் என்னை மிரட்டி கையொப்பம் பெறப்பட்டது.

29. யார் என்னை மிரட்டி கையொப்பம் பெற்றார் என்றால் வாதி ஆறுமுகம் மிரட்டி கையொப்பம் பெற்றார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் வாதி தாவா பி அட்டவணை சொத்தின் உரிமையை ஒத்துக்கொண்டதால் அதை மறுக்க முடியாது என்றால் சரியல்ல.

30. நான் தான் வாதிக்கு சொந்தமான சொத்தை அவரிடமிருந்து அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றாலும் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

(சாட்சிக்கு எழுத்து கூட்டி படிக்க தெரியும் என்பதால் அவருக்கு படித்து காண்பிக்கப்பட்டு பின்னர் கையொப்பம் பெறப்பட்டது.)

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது

மறுவிசாரணை, இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-N.Preethi
DM Cum JM
Cheyyur